

தமிழ்நாடு சட்டப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2009 - 2011)

(பதினைந்தாவது பேரவை)

பத்தாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் : 10 NOV 2010)

சட்டப் பேரவைச் செயலகம்,
சென்னை – 600 002.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு
(2009 - 2011)

(பதின்மூன்றாவது பேரவை)

பத்தாவது அறிக்கை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

		பக்கங்கள்
1.	2009–2011 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அமைப்பு	iii
2.	முகவுரை	v
3.	அறிக்கை	vii

இணைப்பு–1

1.	தமிழ்நாடு தொழிலியல் வெடிமருந்து நிறுவனத்தின் 2006–2007 ஆம் ஆண்டுக்கான இருபத்து நான்காவது ஆண்டறிக்கை மற்றும் 2007–2008 ஆம் ஆண்டுக்கான இருபத்து ஐந்தாவது ஆண்டறிக்கை குறித்து துறை அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் கருத்துரை ..	1
2.	தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் 2006–2007 ஆம் ஆண்டுக்கான முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை மற்றும் 2007–2008 ஆம் ஆண்டுக்கான முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை குறித்து துறை அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் கருத்துரை ..	2
3.	தமிழ்நாடு சாலை கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் 2005–2006 ஆம் ஆண்டுக்கான முதலாவது ஆண்டறிக்கை மற்றும் 2006–2007 ஆம் ஆண்டுக்கான இரண்டாவது ஆண்டறிக்கை குறித்து துறை அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் கருத்துரை ..	3

இணைப்பு–2

1.	பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம் ..	7

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2009–2011 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அமைப்பு

(2009-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12-ஆம் நாளன்று நியமனம் செய்யப்பட்டது)

தலைவர்:

1. திரு. பெ.சு. விஜயகுமார்

உறுப்பினர்கள்:

2. திரு. என். மாலைராஜா
3. திரு. அ. சின்னசாமி
4. திரு. எஸ்.எஸ். குருசாமி
5. திரு. என்.கே.ஆர். சூரியகுமார்
6. திரு. செ. பொன்னுதுரை
7. திருமதி. எஸ். தேன்மொழி
8. டாக்டர் (திருமதி) கே.காயத்ரி தேவி
9. திரு. வீ.ஏடி. கலியவரதன்
10. திரு. தி.க. ராஜா
11. திரு. வே. மாரிமுத்து

செயலகம்

திரு. மா. செல்வராஜ் .. செயலாளர்

திருமதி இரா. அமிர்தவல்லி .. இணைச் செயலாளர்

திரு. பா. அன்பழகன் .. துணைச் செயலாளர்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

முகவுரை

தமிழ்நாடு சட்டப் பேரவையின், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு, பொதுத் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு தொழிலியல் வெடிமருந்து நிறுவனத்தின் 2006–2007, 2007–2008–ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்தின் 2006–2007, 2007–2008 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் மற்றும் தமிழ்நாடு சாலை கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் 2005–2006, 2006–2007 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் குறித்து 07.06.2010 அன்று சென்னையில் நடைபெற்ற குழு கூட்டத்தில் ஆய்வு செய்தது. இக்கூட்டத்தில் சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்கள் மற்றும் அலுவலர்கள் நேரில் கலந்து கொண்டு மேற்காணும் அறிக்கைகள் காலதாமதமாக பேரவைக்கு அளிக்கப்பட்டது குறித்து விளக்கமளித்தனர். அரசுத் துறைச் செயலாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் குழு முன் அளித்த விளக்கத்தின் மீதான பத்தாவது அறிக்கையை (2009–2011) குழுவின் தலைவராகிய நான் பேரவைக்கு அளிக்கிறேன்.

2. தமிழ்நாடு தொழிலியல் வெடிமருந்து நிறுவனம், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு சாலை கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் ஆண்டறிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் அளித்த விளக்கத்தின் மீதான இவ்வறிக்கைக்கு 27.09.2010 அன்று சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது.

3. குழுவின் பணிகளுக்குப் பெரிதும் உதவிய சட்டப்பேரவைச் செயலாளருக்கு குழு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

சென்னை–600 002.
27–9–2010
புரட்டாசி திங்கள் 11–ஆம் நாள்,
திருவள்ளுவராண்டு 2041.

பெ.சு. விஜயகுமார்,
தலைவர்,
பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அறிக்கை

தமிழ்நாடு சட்டப் பேரவையின், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு (2009–2011) 07.06.2010 அன்று நடைபெற்ற குழுக் கூட்டத்தில் **தமிழ்நாடு தொழிலியல் வெடிமருந்து நிறுவனம், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம்** ஆகியவற்றின் ஆண்டறிக்கைகள் கால தாமதமாகப் பேரவைக்கு அளிக்கப்பட்டமை குறித்து அத்துறைச் செயலாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் அளித்த விளக்கத்தின் மீதான **குழுவின் பத்தாவது அறிக்கை.**

சென்னை–600 002.
27–9–2010
புரட்டாசி திங்கள் 11–ஆம் நாள்,
திருவள்ளுவராண்டு 2041.

பெ.சு. விஜயகுமார்,
தலைவர்,
பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

தமிழ்நாடு சட்டமன்றம் TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு தொழிலியல் வெடிமருந்து நிறுவனம் தொடர்பாக தொழில்துறை செயலர் அளித்துள்ள பதில் மீதான குழுவின் கருத்துரை

நிறுவத்தின் பெயர்.	நிதியாண்டு.	பேரவைக்கு அளிக்கப்பட வேண்டிய நாள்.	பேரவைக்கு அளிக்கப்பட்ட நாள்.	காலதாமத விவரம்.
(1)	(2)	(3)	(4)	(5)
தமிழ்நாடு தொழிலியல் வெடிமருந்து நிறுவனம்.	2006–2007	31.03.2008	16.04.2010	24 வது அறிக்கை: 2 வருடம் 15 நாட்கள்
	2007–2008	31.03.2009	16.04.2010	25 வது அறிக்கை: 1 வருடம் 15 நாட்கள்

துறையின் பதில்	குழுவின் கருத்துரை
(6)	(7)
தமிழ்நாடு தொழிலியல் வெடிமருந்து நிறுவனத்தின் 24–வது மற்றும் 25–வது ஆண்டறிக்கைகள் காலதாமதமாக பேரவைக்கு அளிக்கப்பட்டதற்குக் காரணம் பெரும்பான்மையான பணியாளர்கள் விருப்ப ஓய்வு திட்டத்தின் கீழ் சென்றுவிட்டதால்தான் எனவும், பணியாளர்கள் இல்லாததால் பிற இடங்களிலிருந்த பணியாளர்களை மாற்றம் செய்து ஆண்டறிக்கைகள் தயார் செய்யப்பட்டன. மேலும், விருப்ப ஓய்வில் சென்றவர்களின் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை என்றும், நிரந்தர பணியாளர்களை பணியமர்த்தக் கூடாது ஏற்கெனவே இந்நிறுவனம் ரூ.72 கோடி நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றது என்றும் தொழில் துறைச் செயலாளர் தெரிவித்தார். இருப்பினும், இனிவருங்காலங்களில் ஆண்டறிக்கைகளை குறித்த காலத்திற்குள் பேரவைக்குச் சமர்ப்பிக்கிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.	தமிழ்நாடு தொழிலியல் வெடிமருந்து நிறுவனத்தின் 24–வது மற்றும் 25–வது ஆண்டறிக்கைகள் காலதாமதமாக பேரவைக்கு அளித்தது தொடர்பாக துறைச்செயலாளர் அளித்த விளக்கத்தினை ஏற்றுக்கொள்ளலாம் என குழு முடிவு செய்தது. மேலும், வருங்காலங்களில் இதுபோன்ற காலதாமதங்கள் இல்லாமல் ஆண்டறிக்கைகள் பேரவைக்கு அளிக்கப்படவேண்டும் எனவும் குழு பரிந்துரை செய்கிறது.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் தொடர்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலாளர் (பொறுப்பு) அளித்த பதில் மீதான குழுவின் கருத்துரை

நிறுவனத்தின் பெயர்.	நிதியாண்டு.	பேரவைக்கு அளிக்கப்பட வேண்டிய நாள்.	பேரவைக்கு அளிக்கப்பட்ட நாள்.	காலதாமத விவரம்.
(1)	(2)	(3)	(4)	(5)
தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம்	2006–2007	31.03.2008	30.01.2009	33– வது அறிக்கை: 9 மாதம் 29 நாட்கள்
	2007–2008	31.03.2009	09.01.2010	34– வது அறிக்கை: 9 மாதம் 8 நாட்கள்

துறையின் பதில்

(6)

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் 33–வது மற்றும் 34–வது ஆண்டறிக்கைகள் பேரவையில் காலதாமதத்துடன் வைக்கப்பட்டதற்குப் போதிய பணியாளர்கள் இல்லாததுதான் காரணம் என்றும் இது தொடர்பான கணக்குகளை தொகுப்பதில் ஏற்பட்ட காலதாமதம் மற்றும் முந்தைய ஆண்டின் தேக்கநிலையினால் பின்வரும் ஆண்டிலும் அதனால் ஏற்பட்ட பாதிப்பு மற்றும் 40 மையங்கள், 30 மாவட்ட மேலாளர்கள் மற்றும் 10 செயற்பொறியாளர்களிடமிருந்து தணிக்கை அறிக்கைகள் தொடர்பான கணக்குகளைப் பெற்று தொகுக்க வேண்டியிருப்பதாலும் நிதி ஆலோசகர் மற்றும் தலைமைக் கணக்கு அலுவலர் ஆகிய பணியிடங்கள் 2006–2007–ல் நிரப்பப்படாமல் இருந்ததும் காலதாமதத்திற்குக் காரணங்கள் என்றும் இனிமேல் இதுபோன்ற பிரச்சினை வராது என்றும் குறித்த காலத்திற்குள் ஆண்டறிக்கைகள் பேரவைக்கு அளிக்கப்பெறும் எனவும் தாட்கோ மேலாண்மை இயக்குநர் குழுவிடம் உறுதியாகத் தெரிவித்தார்.

குழுவின் கருத்துரை

(7)

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்தின் 33–வது மற்றும் 34–வது ஆண்டறிக்கைகள் பேரவைக்கு அளிப்பதில் ஏற்பட்ட காலதாமதம் குறித்து தெரிவிக்கப்பட்ட விளக்கங்களை ஏற்றுக் கொள்ளலாம் என குழு முடிவு செய்தது. இருப்பினும், காலதாமத்திற்கான விளக்கத்தினை துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு சென்றிருக்க வேண்டும். இந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை. இவை கண்டிப்பாக தவிர்க்கப்படவேண்டுமென்று குழு விரும்புகிறது. இனிவருங்காலங்களில் ஆண்டறிக்கைகளை தவறாமல் குறித்த காலத்திற்குள் பேரவையில் வைப்பதற்கு துறை தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.

தமிழ்நாடு சாலை கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் தொடர்பாக நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறைச் செயலாளர் அளித்த பதில் மீதான குழுவின் கருத்துரை

நிறுவனத்தின் பெயர்.	நிதியாண்டு.	பேரவைக்கு அளிக்கப்பட வேண்டிய நாள்.	பேரவைக்கு அளிக்கப்பட்ட நாள்.	காலதாமத விவரம்.
(1)	(2)	(3)	(4)	(5)
தமிழ்நாடு சாலை கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம்	2005–2006	31.03.2007	14.11.2008	1–வது அறிக்கை: 1 வருடம் 7 மாதம் 15நாட்கள்
	2006–2007	31.03.2008	05.04.2010	2– வது அறிக்கை: 1 வருடம் 4 நாட்கள்

துறையின் பதில்

(6)

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுக் கழகத்தின் 2005–2006 மற்றும் 2006–2007 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் பேரவைக்கு அளிப்பதில் ஏற்பட்ட காலதாமதத்திற்கு காரணம் போதுமான பணியாளர்கள் இல்லாததுதான் எனவும் இத்துறையில் 18 அலுவலர்கள் இருந்தபோதிலும் ஒரேயொரு அலுவலர் மட்டுமே கணக்கு அலுவலராக இருப்பதும் காலதாமதத்திற்கு ஒரு காரணமாகும் எனவும் அரசுச் செயலாளர் தெரிவித்தார். அறிக்கைகளை தமிழில் மொழி பெயர்ப்பதற்கும், சரிபார்ப்பது, அச்சடிப்பது போன்ற பணிகளாலும் காலதாமதம் ஏற்பட்டது என்றும் வரும் ஆண்டுகளில் காலதாமதமின்றி ஆண்டறிக்கைகள் பேரவைக்கு அளிப்பதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அரசுச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

குழுவின் கருத்துரை

(7)

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுக் கழகத்தின் 2005–2006 மற்றும் 2006–2007 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகளை பேரவையில் வைப்பதற்கு ஏற்பட்ட காலதாமதம் குறித்து துறைச் செயலாளர் அளித்துள்ள விளக்கங்களை ஏற்றுக் கொள்ளலாம் என குழு முடிவு செய்தது. துறையில் போதுமான பணியாளர்களை பணியமர்த்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.



அரசு மைய அச்சகம், சென்னை-600 079.